தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 59/மா/2021
நாள். 30.12.2021

திரு.ஜாபர் சாதிக்
கோயம்புத்தூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாநகராட்சி, குனியமுத்தூர் ராஜு நகர் அசோசியேசனைச் சேர்ந்த திரு.ஜாபர் சாதிக் மற்றும் 6 பேரின் 29.10.2020ம் நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.11.2020 அன்று பெறப்பட்டு 59/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் மனு, விசாரணையின் போது அவர்கள் அளித்த வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலம் ஆகியவை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், குனியமுத்தூர் ராஜு நகரைச் சேர்ந்த திரு S.ஜாபர் சாதிக் மற்றும் ஆறு பேர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தாங்கள் வசிக்கும் ராஜு நகரில் கழிவுநீர் உந்து நிலையம் அமைவது குறித்து தங்களது 11.11.2020 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளனர்:–

(A)DETAILS ABOUT RAJU NAGAR RESIDENTS WELFARE ASSOCIATION.

I respectfully submit that Raju Nagar residents welfare Association (hereinafter referred as "COMPLAINANT") is a registered association under the provisions Tamil Nadu Societies Registration Act, 1975 bearing Certificate of Registration No.SRG/Coimbatore/164/2020, located at Plot No.32, Raju Nagar, Kuniamuthur, Coimbatore, Pin 641 008. This Association has been formed with an intent to promote the welfare of the residents of RAJU NAGAR located at Kuniyamuthur. The association is doing lot of social services providing books to the needy school going children, college students, and financial assistance to them

to pursue their studies. The association is located within the administrative jurisdiction of Coimbatore City Municipal Corporation(CCMC). This association is constituted by residents as well as plot owners of RAJU NAGAR layout approved by Directorate of Town & Country Planning (DTCP) under LP/R(CN) No.950/1991 vide survey field numbers, 187/2C part, 188/1, 189/1,2 & 190 and measuring to 4.65 acres, comprised of 57 sites (of which 55 residential sites along with shop site and an open space earmarked for reserved park. The reserved park measures about to 21,845 Sq.ft. or 50 cents and 65 Sq.ft. b are situated at, Raju Nagar, Kuniamuthur, Coimbatore -08.

I respectfully submit that around 375 residents including children are currently using the reserved park. There is a volley ball and badminton court situated in the park.

(B)CAUSE OF ACTION FOR SUBMISSION OF PETITION.

I respectfully submit that the following three instances prompted us to approach your office with a petition:

1. Respondent 1, D.William Gurusamy, s/o. David, residing at No.2, Bharathiar Nagar, Kuniamutur, Coimbatore 641 008, officially claims that he owns a housing plot no.58 measuring to 4 cents and 245 Sq.ft, a part of the land meant for reserved park. He has shown us a copy of the sale deed executed in between respondent 1(buyer) and Mr. Shihabudeen(seller) on 20.06.2008. Respondent 1, D.William Gurusamy intends to occupy the housing plot purchased by him.

   Mr.K.M.Shahabudeen, s/o. Mohamad Ibrahim residing at 107 Tipunagar, Karumbukadai, was the official general power of attorney holder at the time of executing the deed as assigned by Mr.Rasa Gounder, s/o. Rayappa Gounder residing at No.19/47 Thal Factory Street, Kuniamutur, Coimbatore 641 008, through a duly executed general power of attorney on 3rd. November 2006.

2. FURTHER, there is a continuous and deliberate attempts to usurp a portion of the land reserved for park and convert it to four housing plots. One of such housing plot belongs to Respondent 1. They have a forged layout indicating four additional housing plots identified as plot numbers – 58,59,60 and 61 on the eastern portion of the park which is adjacent to kuruchi lake.

3. AND FURTHER, we understood from TNUFIP-UGSS documents such as RESETTLEMENT PLAN, INITIAL ENVIRONMENT EXAMINATION, Tender documents and Government Records that there is also a proposal to construct a SEWAGE PUMPING STATION PS7 (as part of TAMIL NADU URBAN FLAGSHIPS

INVESTMENT PROGRAM (TNUFIP) Coimbatore Underground Sewage System) at the Reserved Park of another layout Rajagopalan Nagar with survey field No.186/2 and 193 pt) which is situated in different location. Respondent 3 i.e., Tamil Nadu Water Supply and Drainage Board(TWAD ) in connivance with Respondent 2 i.e., Coimbatore City Municipal Corporation (CCMC) is contemplating to install this project at Raju Nagar in lieu of Rajagopalan Nagar in illegitimate manner. I also respectfully submit that in the Rajagopalan Nagar few political parties main functionaries are residing and are closely associated with high level political leaders. Because of their influence, we apprehend that the officials of the respondents 3 and 2 without realizing their mistake may commence construction of Sewage Pump Station PS7 at the reserved park of Raju Nagar instead of Rajagopalan Nagar. The officials now are approaching us with an unimaginable rationale that the approved layout of Raju Nagar (with SF 187/2C part, 188/1, 189/1,2 & 190) and another approved layout located in different place called "Rajagopalan Nagar" (with SF No.186/2 and 193 pt)as one and the same. If they construct sewage pump station at the reserved park site of Raju Nagar instead of Rajagopalan Nagar, we along with the whole of the residents of Raju Nagar will be put to great loss and hardship.

4. Further on close scrutiny of following gift deeds

a) 34/1992
b) 1249/1002
c) 1250/1992
d) 1251/1992

executed by developers of Raju Nagar, in favour of MunicipalCorporation, clearly reveals that the open space conveyed is intended for development of park and roads. This reiterate that, reserved park of Raju Nagar should be be full fledged park and not supposed to be used for any other purpose.

THE TNUFIP – UGSS COIMBATORE SCHEME HIGHLIGHTS

It comprised of following:

- A sewage Treatement Plant of about 30 MLD
- Four Main Pumping Stations to collect sewage from lift stations and pumping stations and pump to sewage treatment plant
- Seven Sub pumping stations to collect sewage and pump to pumping stations.
- Nineteen Lift stations: to collect sewage from lower level sewer and pump to higher sewer or pumping stations.

- Networks.

Rajagopalan Pump Station is in the seventh sewage pump station identified as PS7 to collect sewage and pump to Vellolore Sewage Treatment Plant. It has many components:

- Screen well with dia 5m and depth 6 m
- Grit well with dia 3.5 m and depth 7.87 m
- Suction well with dia 7m and depth 8.36m'
- Pump room and DG room of 8 m breadth and 12m length
- Non clog submersible pumpsets
- Odour device using coconut husk
- Green belt
- Compound wall
- Almost 2 contract employees for routine operations.
- Provision for periodic removal of sludge by truck and its loading/parking area.

The above clearly demonstrates, that this sub pump station will occupy effectively substantial portion of the Reserved Park irrespective of the fact that tanks are built underground and other structures are built over the ground. We also would like to bring to your kind attention that the current area of the reserved park available, amounts to 17,456 sq.ft. despite the Corporation document and layout indicated area of 21,845 sq.ft. which really pushes us into dilemma that the most of the portion of the Raju Nagar park will be inordinately sacrificed in lieu of originally inscribed place, Rajagopalan Nagar. Hence, we strongly believe on that the TWAD in connivance with CCMC is contemplating to shift the sewage pump station from Rajagopalan Nagar to Raju Nagar is with ulterior intention and on the basis of frivolous arguments.

ACTION INITIATED BY RAJU NAGAR ASSOCIATION.

I respectfully submit that the Association has furnished following submissions over the period of time to concerned authorities:

- A representation through RPAD on the aforesaid matter to the Commissioner, Coimbatore Corporation, The District Collector, The Chief Engineer – TWAD and the Manager – Larsen & Tubro Ltd. (the contractor) on 16th. June 2020
- TWAD has responded to the representation through RPAD on 6th. August 2020 vide their letter No.2693/F.Petition/JDO(T6)/CE/CBE/2020
- Response to TWAD with rationale against each of the points

referred in the TWAD letter vide No. RWA/02/2020 on 18th. August 2020. A copy of which along with the entire set of exchange of communications was forwarded to the Commissioner, Coimbatore Corporation, The District Collector, The Chief Engineer – TWAD, The Secretary of Government of Tamil Nadu, and the Special Commissioner, Tamil Nadu Town and Country Planning Dept. (attached as Document 9)

- A representation No.RWA/o4/2020 dated 22nd. September,2020 through RPAD to the Chief Secretary – Government of Tamil Nadu with copy to Principal Secretary/Additional Secretary – Municipal Administration and Water Supply Department, The Commissioner – Town and Country Planning, The Commissioner – CCMC , ATPO – CCMC, The Chief Engineer – TWAD after the Commissioner and Assistant Town Planning Officers visit to Reserved Park of Raju Nagar.

Sofar, we have not received any communication/rationale from any of the authorities and we are deeply concerned with the way that our Park is being considered in lieu of another park.

(C) GROUNDS FOR RELIEF SOUGHT.

1. The Sewage Pump Station (PS7) is proposed at Rajagopalan Nagar and not at Raju Nagar as per the TNUFIP – UGSS Coimbatore documents such as Resettlement Plan, Initial Environment Examination documents and the subsequent manipulated sketch forwarded by TWAD. All the above documents clearly reveals that the proposed pumping station is to be constructed at the reserved park site at Rajagopalan Nagar. The relevant portion of those documents are as follows:–

RESETTLEMENT PLAN DOCUMENTS

i) Table 1 with title proposed subject components in Coimbatore of Resettlement Plan – Page no.5 under the head Sub Pump Stations mentioned as "The proposed PS-7 is located at Rajagopalan Nagar and the land belongs to Coimbatore Corporation reserved for public purpose(SF No.185/6)".

ii) Appendix 1 with title Details of roads/streets screened under Resettlement survey) – Page 36 the impact study includes Rajagopal Nagar and Raju Nagar separately. That indicates TWAD and Corporation are aware the existence two distinct place in zone 7.

iii) Appendix 4 with title details of land – page 62 location is specified as Rajagopalan Nagar.

iv) Appendix 5 with title Land Records – Page No.93-94 contains the land records certified by Sub Inspector of Survey, South Zone, Coimbatore Municipal Corporation on 29th. June 2016 is Rajagopalan Nagar Layout No.LR/R(CPN)NR 339/1986 with survey field Nos. 186/2 and 193 Pt where in the proposed project is shaded in dark in the Reserved Park of the Rajagopalan Nagar.

INITIAL ENVIRONEMENT EXAMINATION.

v) Table 1 with title Proposed Water Supply Subproject components – Page 7 of Sewage Pumping Stations for collecting sewage and pump to main stations includes Rajagopalan Nagar.

vi) The online comparison with google earth provided in Figure 2 reveals that the proposed pump station is at RG Nagar i.e., Rajagopalan Nagar.

vii) Table 11 with title site environment features – page 39 also mentions Sewage Pump Station at Rajagopalan Nagar.

RESPONSE RECEIVED FROM TWAD.

A sketch titled Rajagopalan Nagar (name matching with Resettlement Plan and Initial Environment Engineering documents) on the back ground of Raju Nagar Layout was forwarded as attachment to the response letter received from TWAD.

2. The contention of TWAD in their response was Rajagopalan Nagar and Raju Nagar is one and the same is irrational, illogical and inadmissible at any tenets or stretch of imaginations Rajagopalan Nagar and Raju Nagar are two different reserved parks, identified by distinct unique survey field numbers and respective layout approvals. There is atleast half kilometer distance between both the layouts. The details of Rajagopalan Nagar and Raju Nagar are presented below:

- Rajagopalan Nagar was approved vide DTCP No.LR/R(CPN) NR 339/1986 with areas covering survey field nos. 186/2 and 193 Pt.
- whereas Raju Nagar was approved vide DTCP No.LP/DT and CP 950/1991 with areas covering survey field Nos. 187/2Cpt, 188/1, 189/1, 189/2 and 190.

3. Another significant point to be taken into consideration is that the Rajagopalan Park has become operational/inaugurated during the

year 2018 at the cost of Rs.95 lakhs by CCMC, which is after realizing the Rajagopalan Park is being designated as a location for the Sewage Pump Station PS7. This obviously reveals the ill-intention/discriminatory behind subtle motive of the change of location without due sanctions to a differently located reserved park. The surreptious methodology of bartering a reserved park at a differently located layout in lieu of Rajagopalan Nagar calling them by common name by TWAD and Corporation, is primarily politically motivated and to protect the interests of certain individuals at Rajagopalan Nagar which is not tenable under any tenets of justice, unreasonable and illegitimate. The construction of Sewage pumping station PS7 in park site of Raju Nagar instead of park site of Rajagopalan Nagar by respondents would amount to the entire collapse of the Government machineries and would clearly expose the lethargic attitude, laziness, failure and utter negligence in discharging the official duty.

4. There are approved housing plots and dwellings on the peripheries of the reserved park. The impending pump station shall impact each and every houseold of Raju Nagar layout and the adjacent areas heavily. The geographical boundaries of the Reserved Park shows that it is, Eastern side Kurichi lake and surrounded by residential buildings north, south and western side, with perimeter of 23 ft and 30 ft road.

5. The wrong installation at Raju Nagar reserved park, shall truly jeopardize our ecology as well as economic condition adversely as it snatches away our lung space reserved for a resplendent park as approved by DTCP.

6. Moreover, initial Environment Evaluation Document (IEEE) emphasizes that there is comparatively higher potential of odor generation as the gas may include odorous compounds like hydrogen sulphides ($H_2S$), amines, fatty acids, aldehydes, ketones and other volatile organic compounds (VOCs). As the water level rises in the well/tanks before pumping cycle, it physically displaces the air along with odourous compounds. $H_2S$ is the most dominant odour causing compound and therefore can cause nuisance to all the nearby households. Whereby residents will not have any choice, rather to accept to live by inhaling foul smell as their breath.

7. IEE document goes further to categorically reiterate that the priority has to be given to accommodate the pumping stations at more suitable locations away from houses and mostly in sparsely populated areas. It is unfortunate that PS7 pumping station is originally proposed at Rajagopalan Nagar is now wrongly intended

to be installed at different location – Raju Nagar Reserved Park site, despite the layout being duly approved by DTCP. A glance at the Document will speak in volumes that this place is not sparsely populated but filled with houses and the installation of the sewage pumping station is likely to prove to be a health hazard.

8. DTCO distinctly demarked diagonally through the layout of Raju Nagar Reserved Park, a pre-existing water supply channel called Raja vaickal, which reiterates the necessity of preserving it as a park without compromising on the water supply channel path. Such water supply channels assumes paramount importance for water bodies connectivity, irrigation to farmers, flood controls and preserving precious water reservoirs. Building a permanent structure over it by TWAD/CCMC or private individuals, sets a new precedence of not preserving such rare water supply channel. We earnestly appeal to authority that not to show any leniency on such instances under the garb of governance by local authority and request to protect its due magnanimity. The existence of water supply channel is specifically referred in the information provided by Coimbatore Local Planning Authority vide no. 6082/2019/T dated 15.07.2020 in response to our querry dated 03.09.2019 under Right to Information Act 2005.

9. The rulings of the Hon'ble Supreme Court and Hon'ble High Court clearly state that the conversion of park sites of the approved layouts for any other purposes is against the law and the conversion of reserved park site for other purposes other than what it was intended for tantamount to a gross contempt of court and against the true spirit of the law.

HIGH COURT JUDGEMENTS.

i) K.Rajamani v.Alamunagar Residents Association,2011 (1) CTC 257
ii) Usha Rani & Others v. Commissioner, Corp. of Vellore 321 of 2011
iii) VNR Nagar Welfare Association v. K.K.Babu & Another 2013 5 MLI 503
iv) Jan Kalyan Samithi v.State of Haryana & Others CWP – 16291 -2020

SUPREME COURT JUDGEMENTS.

i) Bangalore Medical Trust v. B.S.Muddappa AIR 1991 SC 1991
ii) KK Balla v.State of MP, 2006 SCC 581 AIR 2006 SC 898

10. Government Order No.169/2015 and 170/2016 dated 22.11.2016 from the office of the Tamil Nadu Local Bodies Ombudsman mandating the following that:

   i) The Authorities cannot ignore or neglect to develop the open space (earmarked for park) into a public park within a reasonable period of time.
   ii) The land reserved for public purpose in a layout in a development plan or master plan approved by the local body cannot be used for any other purpose than the one specified therein.

11. Further, letter No. 37230/MA/2007 dated 13.11.2007 issued by Deputy Secretary to Government, Municipal Administration and Water Supply Department to all the local bodies directing them that where the court has ordered that a portion of land reserved for public purpose in a layout or in a development plan or master plan approved by the local body has to be used for a particular purpose, under no circumstances can the land be used for any other purpose than the one specified therein. The Court has also directed the Chief Secretary to Government, Local Administration Department, to communicate the copy of the order to all the local bodies notifying them to scrupulously apply and follow the directions made therein in respect of usage of lands earmarked for public purposes.

12. Further, the information under Right to Information Act vide 5424/2019/T dated 15.07.2020 issued by Coimbatore Local Planning, DTCP mandates that the site earmarked for park shall be used only for its designated purpose only. Followings Government Orders and judgements are being recommended for protection against the usage of site earmarked for park for other than its designated purpose i.e. park

   i) GO Ms.No.134, MAWS dt. 20.09.2020
   ii) GO Ms.No.7111, RDIA Department dt.16.06.2003
   iii) GO Ms.No.18, MAWS dt. 04.02.2019
   iv) Madras High Court W.A No.156 of 2000 and 45 of 2003 Order dt. 12.04.2007

13. The Construction of Sewage Pump Station PS7 or house in the reserved park site by the respondents is against the Tamil Nadu Town and Country Planning Act, 1971(T.N.Act 35 of 1972) under sections 32,36 to 40 & 90.

14. The Construction of Sewage Pumping Station PS7 or house in the reserved park site by the respondents is also against The Tamil Nadu Parks, Play Fields and Open spaces (Preservation and Regulation) Act (26 of 1959)

the Hon'ble Ombudsman may deem fit and proper in the interest of justice and thus render justice.

முறையீட்டு மனுதாரர், கோயம்புத்தூர் மாநகராட்சியைச் சேர்ந்த உதவி ஆணையர் ஆகியோர் 25.11.2021 நாளிட்ட அழைப்பாணையின் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 08.12.2021 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு கோரப்பட்டனர்.

மனுதாரர்கள் சார்பில் திரு. எம்.உஸேன் மற்றும் திரு வி.பிரதீப் ஆகியோர் 08.12.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி பின்வரும் வாக்குமூலத்தை அளித்துள்ளனர்.

" கோயம்புத்தூர் மாவட்டம் குனியமுத்தூர், ராஜூ நகரில் நாங்கள் வசிக்கின்றோம். நாங்கள் வசிக்கும் லே அவுட்டில், பூங்காவிற்காக சுமார் 50 சென்ட் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பம்பிங் ஸ்டேசன் கட்ட முடிவு செய்துள்ளனர். நாங்கள் குடியிருக்கும் பகுதியின் நடுவே உள்ள பூங்காவில் மேற்கண்ட பம்பிங் ஸ்டேசன் கட்டப்பட்டால், அங்குள்ள குடியிருப்போர் அனைவரும் சுகாதார சீர்கேட்டினால் பாதிக்கப்படுவோம். எனவே, ராஜூ நகரில் மேற்கண்ட பம்பிங் ஸ்டேசன் அமைப்பது குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் பலமுறை முறையீடு செய்யப்பட்டது. ஆனால், பயன் ஏதும் இல்லை. மேற்கண்ட பம்பிங் ஸ்டேசன் எங்களது இடத்திற்கு அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ராஜகோபால் நகரில் அமைத்திட முதலில் உத்தேசிக்கப்பட்டு தற்போது எங்களது நகரில் அமைத்திட மாநகராட்சி அலுவலர்கள் உத்தேசித்துள்ளனர்.

மேற்கண்ட பூங்கா இடத்தை ராஜூ நகரில் குடியிருப்போர் கடந்த 30 வருடங்களாக நல்ல முறையில் பராமரித்து வருகின்றனர் என்பதையும், அதற்கான வீடியோ ஆதாரங்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

எனவே, மேற்கண்ட பம்பிங் ஸ்டேசனை எங்களது ராஜூ நகர் குடியிருப்புகளுக்கு நடுவே உள்ள பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் அமைக்காமல் வேறு எங்கேயாவது அமைத்திட வழிவகை செய்திடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம் " என தெரிவித்துள்ளனர்.

கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையர் திருமதி.க. ஜெயலட்சுமி என்பவர் 08.12.2021 அன்று இம்முறை மன்றத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

" கோயம்புத்தூர் மாநகராட்சி குனியமுத்தூரில் உள்ள ராஜூ நகர் குடியிருப்பில் அமைந்துள்ள பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட திறந்த வெளி இடத்தில் (OSR) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க தமிழ்நாடு குடிநீர்

வடிகால் வாரியத்திற்கு முன் அனுமதி வழங்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள பொதுமக்களின் ஆட்சேபனையைத் தொடர்ந்து மேற்கண்ட ராஜு நகருக்கு பதிலாக மாச்சாம்பாளையம் அரசு மேல் நிலைப்பள்ளி பகுதியில் காலியாக உள்ள அரசு புறம்போக்கு நிலத்தின் ஒரு பகுதியில் மேற்கண்ட பம்பிங் ஸ்டேசன் அமைக்க குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு 17.09.2021 அன்று அனுப்பப்பட்டுள்ளது என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இது தொடர்பான மாநகராட்சி ஆணையரின் கடிதத்தின் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்" என தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தனது 17.09.2021 நாளிட்ட கடிதத்தில் " கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடைத் திட்டம் வசதி ஏற்படுத்தும் பொருட்டு, கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க ராஜீ நகர் மற்றும் பூங்கா நகர் பகுதிகளில் உள்ள பொது ஒதுக்கீடு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தொடர்ந்து ஆட்சேபம் செய்து வந்ததால், மதுக்கரை மற்றும் பேரூர் வட்டாட்சியர் அவர்களின்தலைமையில் பொது மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு தீர்வு ஏற்படாத காரணத்தால், மேற்கண்ட இரண்டு இடங்களுக்கு மாற்றாக குறிச்சி குளக்கரையின் தென்புறப்பகுதியில் அமைந்துள்ள மாச்சம்பாளையம் அரசு மேல் நிலைப்பள்ளிக்காக குனியமுத்தூர் கிராமம் க.ச.எண்.177/4ல் பாராதீனம் செய்யப்பட்டுள்ள (அரசு புறம்போக்கு நிலம்) 3.71 ஏக்கர் பரப்பளவு இடத்தில், முக்கோண வடிவில் பள்ளியின் வடகிழக்கு பகுதியில் தற்போது காலியாக உள்ள் 2142 ச.மீ.பரப்பளவு இடத்தினை கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க உகந்த இடமாக தேர்வு செய்து மாநகராட்சி பெயருக்கு நிலஉரிமை மாற்றம் செய்து இடத்தினை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே மேற்கண்ட குனியமுத்தூர் கிராமம், க.ச.எண்.177/4, மாச்சம்பாளையம், அரசு மேல்நிலைப்பள்ளிகூடம் அமைந்துள்ள வருவாய் ஆவணங்களின்படி பள்ளிகூடம், கல்விதுறை என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில், முக்கோண வடிவில் பள்ளியின் வடகிழக்கு பகுதியில் காலியாக உள்ள 2142 ச.மீ. பரப்பளவு இடத்தினை கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க மாநகராட்சிக்கு நிலஉரிமை மாற்றம் செய்து தருமாறும், பணியின் அத்தியாவசியம் மற்றும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள முன் நுழைவு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்."

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் 17.09.2021 நாளிட்ட கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் கடிதம் மற்றும் 18.08.2021 நாளிட்ட கோயம்புத்தூர்TWAD Board செயற்பொறியாளரின் கடிதம் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில் மனுதாரர் தங்கள் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்படுவதினால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை குறிப்பிட்டு தொடர்ந்து ஆட்சேபனை செய்து வந்துள்ளனர். இது தொடர்பாக பல ஆண்டுகளாக தொடர்ந்து போராடிக்கொண்டுள்ளதையும் அறிய முடிகின்றது.

மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளது போல் அல்லாமல் தற்பொழுது குறிச்சி குளக்கரையின் தென்புறப் பகுதியில் அமைந்துள்ள மாச்சம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளிக்காக குனியமுத்தூர் கிராமம் க.ச.எண்.177/4–ல் பாராதீனம் செய்யப்பட்டுள்ள (அரசு புறம்போக்கு நிலம்) 3.71 ஏக்கர் பரப்பளவு இடத்தில் முக்கோண வடிவில் பள்ளியின் வடகிழக்கு பகுதியில் காலியாக உள்ள 2142 ச.மீ.பரப்பளவு இடத்தினை கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க உகந்த இடமாக தேர்வு செய்து மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்து தருமாறும், பணியின் அத்தியாவசியம் மற்றும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள முன் நுழைவு அனுமதி வழங்குமாறும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கோரப்பட்டுள்ளதை கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் கடிதத்திலிருந்து அறிய முடிகின்றது.

பொதுப்பயன்பாட்டிற்கு என்று ஒதுக்கப்பட்ட மனைகள் அதற்கான பயன்பாட்டிற்கு அல்லாமல் பிறபயன்பாட்டிற்கு பயன்படுத்தக் கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் வழங்கிய பல்வேறு தீர்ப்புகளிலிருந்து நாம் அறியமுடிகின்றது.

ஆதலால் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பொதுப்பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மனைகளை அதற்கான பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட குறிச்சி குளக்கரையின் தென்புறப்பகுதியில் அமைந்துள்ள மாச்சாம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியின் காலியாக உள்ள வடகிழக்கு பகுதியில் உள்ள 2142 ச.மீ. பரப்பளவு இடத்தில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும்போது குடிநீருக்கு ஆதாரமாக உள்ளதாக மனுதாரரால் குறிப்பிடப்படும் இடங்கள் எவ்விதத்திலும் மாசுபடாத வகையில் மிகுந்த அனுபவம் வாய்ந்த மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் கருத்துக்களைப் பெற்று அமைப்பதுடன் தொடர் கண்காணிப்பு பராமரிப்பினையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக மேற்கொள்ளப்படவேண்டுமென கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The land space earmarked for OSR classification such as Parks, Schools etc. in any housing layout should not be set apart for any other purpose than what it is meant for as it is likely to attract legal action also by

Courts when challenged. This may be kindly kept in mind by the Corporation.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.ஜாபர் சாதிக்,
தலைவர், ராஜு நகர் குடியிருப்போர் நலசங்கம்,
32, ராஜு நகர், அன்னமநாயக்கர் சாலை,
குனியமுத்தூர்,
கோயம்புத்தூர் – 641 008.

2)ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600028.

4)இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்